# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

********

முறையீட்டு மனு எண்: 174/2018/பே

ஆணை நாள் 16 –11–2018

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பி.மேட்டுப்பபாளையம் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

திரு. M. ஆறுமுக நயினார், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை, மைலாப்பூர், சென்னை–4, என்பவரின் 30.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018 அன்றே பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 174/2018 என எண்ணிடப்பட்டு, மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. M. ஆறுமுக நயினார், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் ஈரோடு மாவட்டம். பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.103/2013/நாள்.27.02.2016 ன்படி 2014–15–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில பணிகளுக்கான ஒப்பந்த அறிவிப்பினை, தனது கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி என்ற நிறுவனம் மூலம் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரத் தொகையாக ரூ.48,000/- கோரி பட்டியல் எண். 361/2014–15 நாள் 05.03.2015 மூலம் பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டும், மேற்படி தொகை கடந்த மூன்று ஆண்டு காலமாக தனக்கு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

07.08.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து பி.மேட்டுப்பளையம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

17.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யும் பொருட்டு 14.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து, முறையீட்டு மனுதாரர்

மற்றும் பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

ஈரோடு மாவட்டம், பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 12.11.2018 நாளிட்ட கடிதத்தில், மேற்படி பேரூராட்சியில் 2014–15ம் நிதியாண்டில் கட்டப்பட்ட புதிய அலுவலக கட்டிட ஒப்பந்தம், மேற்படி நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதாகவும் மேற்படி விளம்பரத்திற்கான விளம்பரக் கட்டணம் ரூ.48,000/– காசோலை எண்.542681/நாள் 09.11.2018ன்படி தற்போது வழங்கப்பட்ட விவரத்தினைத் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தரப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு.சிவராமன் என்பவர், தனது வாக்குமூலத்தில் மேற்படி முறையீட்டு மனு தங்கள் நிறுவனத்தால் அனுப்பப்பட்டதாகவும், அதில் கூறியுள்ளவாறு பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி மூலம் அளிக்கப்பட்ட விளம்பரத்தினை பிரசுரம் செய்த வகையில் ரூ.48,000/– கொடுக்கப்படாமல் உள்ளதை பெற்றுத் தர மனு செய்ததாகவும், மூன்றாண்டு ஆண்டு காலமாக கிடைக்காமல் இருந்த தொகை தற்போது இம்முறைமன்ற நடுவ அமைப்பிற்கு மனு செய்ததின் மூலம் பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து 09.11.2018 நாளிட்ட காசோலை மூலம் பெறப்பட்டுவிட்டதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த பின்னர் மேற்படி விளம்பரக்கட்டணம் பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சியால் வழங்கப்பட்டுவிட்டதாக செயல் அலுவலரின் கடிதம் மற்றும் முறையீட்டு மனுதாரர் சார்பில் ஆஜரானவரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்று இம்முறைமன்ற நடுவ தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 16 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர். 26/11/2018

பெறுநர்

1.திரு. ஆ. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
திருவேணி அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

2.செயல் அலுவலர்,
பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

23/11/18